IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PERUNDURAI

**STC No. 425/2019**

**Pw**1 - சந்திரசேகர் த/பெ. பழனிச்சாமி

**Accused present**.

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the day of **Date 19.05.2026.**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

**1.** நான் எங்கு குடியிருக்கிறேன் என்றால் தற்போது கோபிசெட்டிபாளையத்தில் குடியிருந்து வருகிறேன். நான் எதிரிக்கு பணம் கொடுத்ததாக சொல்லப்படும் தேதியில் எங்கு குடியிருந்தேன் என்றால் பெருந்துறை டவுனில் குடியிருந்தேன். நான் பணம் கொடுத்ததாக சொல்லப்படும் தேதியில் எதிரி ஈரோடு தங்கம் நகரில் குடியிருந்தார் என்றால் சரிதான் நான் குடியிருக்கும் இடத்திற்கும் எதிரி குடியிருக்கும் இடத்திற்கும் சுமார் 15 கிலோ மீட்டர் தூரம் என்றால் இருக்கலாம். பணம் கொடுத்ததாக சொல்லப்படும் சமயத்தில் நான் என்ன வேலை செய்து வந்தேன் என்றால் கொங்கு இன்ஜினியரிங் கல்லூரியில் விரிவுரையாளராக பணிபுரிந்து வந்தேன். நான் பைனான்ஸ் செய்து வரவில்லை என்றால் சரிதான்.எதிரி எந்த தேதியில் பணம் கேட்டார் என்றால் 30.05.2019 ம் தேதி கேட்டார் எங்கு வைத்து பணம் கேட்டார் என்றால் என்னுடைய வீட்டுக்கு வந்து பணம் கேட்டார்.

2. போன் மூலமாக பணம் எதுவும் கேட்டாரா என்றால் இல்லை. எதிரி பணம் கேட்கும் பொழுது யாரையாவது அழைத்து வந்திருந்தாரா என்றால் இல்லை. நான் பணம் கொடுத்ததாக சொல்லப்படும் சமயத்தில் என்னுடன் யாராவது இருந்தார்களா என்றால் யாரும் இல்லை நான் மட்டும்தான் இருந்தேன். எத்தனை மணிக்கு பணம் கொடுத்தேன் என்றால் காலை 7 மணி இருக்கும். எத்தனை ரூபாய் நோட்டுக்களாக கொடுத்தேன் என்றால் ரூ 500 ரூபாய் நோட்டுக்களாக 8 கட்டுகள் கொடுத்தேன். காசோலையை எதிரியே நிரப்பிக் கொடுத்தாரா என்றால் ஆமாம். ஒரு காசோலையை மட்டும் கொண்டு வந்தாரா காசோலை கட்டுகளாக கொண்டு வந்தாரா என்றால் ஒரு காசோலையை மட்டும் கொண்டு வந்தார்.

3. பணம் கொடுத்ததற்கு காசோலையை தவிர வேறு ஆவணம் எதுவும்

வாங்கினேனா என்றால் இல்லை. பணம் கொடுத்த சமயத்தில் நான் இருந்த வீடு என்னுடைய வீடா என்றால் ஆமாம். என்னுடைய வீடு லோன் வாங்கி கட்டப்பட்டதா என்றால் இல்லை. எதிரி 1987 ஆம் ஆண்டிலிருந்து வழக்கறிஞராக ஈரோடு நீதிமன்றத்தில் பணிபுரிந்து வருகிறார் என்றால் வழக்கறிஞராக பணியாற்றி வருவது தெரியும் ஆண்டு எனக்கு தெரியாது. எதிரி குற்றவியல் அரசு வழக்கறிஞராக பத்து ஆண்டுகள் பணிபுரிந்தார் என்றால் வழக்கறிஞராக பணிபுரிந்தது தெரியும் அரசு வழக்கறிஞராக பணி புரிந்தது எனக்கு தெரியாது. எதிரியின் தொழிலுக்கும் எனது தொழிலுக்கும் சிறிதும் சம்பந்தமில்லை என்றாலும், எதிரிக்கு என்னை யார் என்று தெரியாதே என்று சொன்னால் சரியல்ல.

4. எதிரிக்கு நான் பணம் கொடுத்ததாகவும் அதற்காக எதிரி காசோலை கொடுத்ததாகவும் பொய்யாக சொல்கிறேன் என்றும் எதிரிக்கு என்னை யார் என்றே தெரியாது என்று சொன்னால் சரியல்ல. எதிரிக்கு என்னிடம் பணம் வாங்க வேண்டிய தேவை இல்லை என்றும் எதிரியே நல்ல வசதி வாய்ப்போடு இருந்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. எதிரி என்னிடம் பணம் வாங்கியதாக சொல்லப்படும் தேதியில் எதிரியின் வங்கி கணக்கில் ரூ 1,70,153.36 பைசா பணம் இருந்தது என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. 12.03.2019 ம் தேதியில் தனக்கு பாத்தியப்பட்ட பூமியை விற்பனை செய்து ரூ 5 லட்சத்தை ரொக்கமாக பணமாக வைத்திருந்தார் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. எதிரியின் மனைவி வெள்ளாளர் மெட்ரிகுலேஷன் பள்ளியில் ஆசிரியராக உள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியும்.

5. எதிரி பணம் வாங்கியதாக சொல்லப்படும் தேதியில் எதிரி நல்ல வசதியோடு இருந்தார் என்றும், எதிரிக்கு அந்த தேதியில் பணம் வாங்க வேண்டிய தேவை இல்லை என்றால் சரியல்ல. எனக்கு எதிரியை தெரியாததால் தான் எதிரியை எப்படி தெரியும் என்று என்னுடைய வழக்கறிஞர் அறிவிப்பிலோ, பிரமாண வாக்குமூலத்திலோ, புகாரிலோ சொல்லவில்லை என்றால் சரியல்ல. எதிரியின் சகலை தாமோதரன் மூலமாக தெரியும். எதிரியின் சகலை தாமோதரன் மூலமாக தெரியும் என்ற விவரத்தை என்னுடைய வழக்கறிஞர் அறிவிப்பிலோ, பிரமாண வாக்குமூலத்திலோ, புகாரிலோ சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரிக்கு பணம் கொடுத்ததாக சொல்லப்படும் சமயத்தில் நான் வீடு கட்டி லோன் செலுத்தி வந்தேன் என்றும் எதிரிக்கு கொடுத்ததாக

சொல்லப்படும் தொகையை கொடுக்கும் அளவுக்கு எனக்கு வசதி இல்லை என்றால் சரியல்ல.

6. நான் வருமான வரி கணக்கில் எதிரிக்கு கொடுத்ததாக சொல்லப்படும் தொகையை காட்டியுள்ளேனா என்றால் இல்லை. எதிரிக்கு பணம் கொடுக்கவில்லை என்றும் அதனால் தான் வருமான வரி கணக்கில் நான் காட்டவில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரியின் மைத்துனர் பூபதிராஜா லாரி டிரான்ஸ்போர்ட் மற்றும் பைனான்ஸ் வைத்திருந்த விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். 2017 ஆம் ஆண்டில் எதிரியின் மைத்துனர் பூபதி ராஜாவிடம் எதிரி பைனான்ஸ் வசதிக்காக வழக்கு காசோலையை கொடுத்து இருந்தார் என்றால் சரியல்ல. எதிரியின் மைத்துனர் பூபதிராஜா 2019 ஆம் ஆண்டு லாரி விபத்தில் இறந்துவிட்டார் என்றால் சரிதான். 2019 ஆம் ஆண்டில் பூபதிராஜா இறந்துவிட்டதால் அவரிடமிருந்து ஏதோ ஒரு வகையில் இந்த காசோலையை பெற்று துர்லாபம் அடைய வேண்டும் என்பதற்காக இந்த காசோலை வழக்கினை போட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

7. பு.சா.ஆ. 4 வழக்கறிஞர் அறிவிப்பு எதிரிக்கு முறையாக சார்வு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. தெரியாத எதிரிக்கு பணம் கொடுத்ததாக சொல்வது பொய் என்றும், எதிரி பணம் எதுவும் என்னிடம் பெறவில்லை என்றும் அதற்காக காசோலை எதுவும் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரியின் மைத்துனரிடம் இருந்து பெற்றுக் கொண்ட காசோலையை வைத்து இந்த பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை.

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை